தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 70/பேரூ/2022

நாள் 29.06.2022

திரு. அ. பிரகாஷ்,
ஓமலூர், சேலம் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஓமலூர் பேரூராட்சி, சேலம் மாவட்டம் ... எதிர்மனுதாரர்

சேலம் மாவட்டம், ஓமலூர் மற்றும் வட்டம், 7/1 அரசமரத்தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. அ. பிரகாஷ் என்பவரது 20.05.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.06.2022ல் பெறப்பட்டு, 70/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாவட்டம், ஓமலூர் மற்றும் வட்டம், 7/1 அரசமரத்தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. அ. பிரகாஷ் தமது 20.05.2022 நாளிட்ட புகார் மனுவில் ஓமலூர் பேரூராட்சியில் மேட்டூர் குடிநீர் பராமரிப்புப் பணிகளுக்கான செலவுச் சீட்டுகளில் முறைகேடுகள் நடந்துள்ளதாகவும், மேட்டூர் குடிநீர் பராமரிப்புப் பணிகளுக்கு ஜெனித் & கம்பெனி என்ற நிறுவனம் ஒப்பந்ததாரர் என்ற முறையில் பைப்கள் மற்றும் உதிரிபாகங்கள் விநியோகம் செய்து, அதற்கு தனியாக பேரூராட்சி பொது நிதியிலிருந்து தொகை கொடுக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் 1.5.2021 முதல் 03.12.2021 வரை மேட்டூர் குடிநீர் பராமரிப்புப் பணிகளுக்கான செலவுச் சீட்டுகள் மூலம் ரூ.6,29,000/– திரு. செல்வம் என்பவரது பெயரில் காசோலையாக

கொடுக்கப்பட்டுள்ளது என்றும், பல்வேறு இடங்களில் குடிநீர் இணைப்புகளில் பழுது ஏற்பட்டது என்று போலியாக விண்ணப்பம் தயார் செய்து திரு. செல்வம் என்பவரது பெயரில் காசோலை கொடுத்து அதை அவர் வங்கியில் மாற்றி வங்கிலிருந்து அவர் வெளியே வரும்போது பேரூராட்சி பிட்டர் விதுன் என்பவர் பணத்தை பெற்றுச் சென்றுள்ளார். எனவே ஒரே பணிக்காக இரண்டு முறை தொகை கொடுக்கப்பட்டுள்ளதாக சந்தேகம் உள்ளது என்றும், மே 2021 முதல் அக்டோபர் 2021 வரையிலான 6 மாத காலங்களில் வாங்கிய பொருட்களில் ஊழல் நடைபெற்றிருக்குமென சந்தேகம் உள்ளது என்றும், எனவே, இது குறித்து விசாரணை மேற்கொண்டு 6 மாத காலத்தில் பணி செய்த செயல் அலுவலர்கள் மற்றும் இதற்கு உடந்தையாக இருந்த பேரூராட்சி பிட்டர் விதுன் ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்து ஊழல் நடைபெற்ற பணத்தை பறிமுதல் செய்து பொது நிதியில் சேர்க்குமாறு கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்துள்ளார். மனுதாரர் தனது புகார் குறித்து ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் 1.5.2021 முதல் 31.12.2021 வரை திரு. ஜி. செல்வம் என்பவருக்கு காசோலை வழங்கப்பட்ட விவரத் தொகுப்பு அட்டவணையை ஆதார ஆவணமாக இணைத்தனுப்பியுள்ளார்.

2. ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் மனுதாரர் ஆகியோர் 16.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 09.06.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. மனுதாரர் மற்றும் ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் 16.6.2022 இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

மனுதாரர் திரு. பிரகாஷ் அளித்துள்ள வாக்குமூலத்தில் “ஓமலூர் பேரூராட்சியில் குடிநீர் இணைப்புகளில் பழுது என தெரிவித்து போலியான பில்களை கொடுத்து பேரூராட்சி அலுவலர்கள் முறைகேடாக பணத்தை வாங்கியுள்ளனர். அதாவது 1.5.2021 முதல் 03.12.2021 வரை மேட்டூர் குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு செலவுச் சீட்டுகள் மூலம் ரூ.6,29,000/– (ரூபாய் ஆறு லட்சத்து இருபத்தொன்பதாயிரம் மட்டும்) திரு. செல்வம் என்பவரது பெயரில் காசோலையாக பேரூராட்சியால் கொடுக்கப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்புகளில் பழுது ஏற்பட்டது என்ற பெயரில் போலியாக விண்ணப்பம் தயார் செய்து செல்வம் என்பவரது பெயரில் காசோலை கொடுத்து அதை அவர் வங்கியில் மாற்றி பணம் பெற்றுள்ளார். குடிநீர் குழாய் பழுதுகள் பொதுவாக ஒரு வார்டுக்கு 4 அல்லது 5 தான் ஒரு மாதத்தில் வரக்கூடும். ஆனால் ஓமலூர் பேரூராட்சியில் நான் வசிக்கும் வார்டைத் தவிர (வார்டு எண்.4) மற்ற வார்டுகளில் அடிக்கடி பழுது என தெரிவித்து, பில் அளித்து பணத்தை பெற்றுள்ளனர். எனவே, மேற்கண்ட முறைகேடு குறித்து உரிய விசாரணை நடத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது 20.5.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையே எனது மேல் விளக்கமாக பதிவு

செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. கா. கதிர்வேல் மற்றும் குடிநீர் குழாய் பொருத்துநர் திரு. அ. விதுன் ஆகியோர் அளித்துள்ள வாக்குமூலத்தில் "சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சியில் கடந்த **6** மாதங்களாக செயல் அலுவலராகவும், திரு. அ. விதுன் கடந்த **5** ஆண்டுகளாக குடிநீர் குழாய் பொருத்துநராகவும் பணியாற்றி வருகிறோம். சேலம் மாவட்டம், ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் **2021–2022**ஆம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேட்டூர்–ஆத்தூர் கூட்டுக்குடிநீர் திட்ட பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள திரு. ஜி. செல்வம், மேட்டூர் என்பவரை ஒப்பந்ததாரராக அங்கீகரித்து பேரூராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. குடிநீர் பராமரிப்புப் பணிகளுக்கு பொருட்கள் ஜெனித் டீயூப்ஸ் அண்டு பைப்ஸ், குமாரபாளையம் என்ற நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டு பேரூராட்சி மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பொருட்கள் மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டவுடன் இளநிலை உதவியாளர் பொருட்களை வாங்கி வைப்பார். இதற்கான இருப்புப் பதிவேடு (Stock Register) பேரூராட்சியின் பொருத்துநர் (Fitter) வைத்திருப்பார். தேவைக்கேற்ப பொருட்கள் அளிக்கப்படும்போது செயல் அலுவலர் மேற்படி இருப்புப் பதிவேட்டில் சுருக்கொப்பம் இட்டு பொருட்களை வழங்குவது நடைமுறையில் உள்ளது. **1.5.2021** முதல் **12/2021** வரையிலான காலத்திற்கான மேற்கண்ட இருப்புப் பதிவேட்டினை இம்முறைமன்ற நடுவத்தின் முன் சமர்ப்பித்து, நடுவத்தால் பார்வையிடப்பட்டது. மேற்கண்ட பதிவேட்டில் பணிகளுக்கு வழங்கியதில் தேதிவாரியாக பொருட்கள் அளித்ததற்கான விவரங்கள் இல்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் திட்ட குழாய் உடைப்பு சம்பந்தமாக பொதுமக்களால் தெரிவிக்கப்படும் புகார்களையொட்டி பொருத்துநரால் (Fitter) வழங்கப்படும் அறிக்கையின் அடிப்படையில் பேரூராட்சி செயல் அலுவலரால் தல ஆய்வு செய்யப்பட்டு ஒப்பந்ததாரரை உடன் பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டு, பழுதுகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன என்பதை இம்முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற நேர்வுகளில் பொது மக்களிடமிருந்து எழுத்துபூர்வமான புகார்கள் ஏதும் பேரூராட்சியால் பெறப்படுவதில்லை என்ற தகவலை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட பழுதுநீக்கப் பணிகளை மேற்கொள்ளும்போது, பழுது நீக்கத்திற்கு முன்பு இருந்த நிலையையும், பழுது நீக்கிய பின்னர் உள்ள நிலையையும் புகைப்படமாக எடுக்கவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். ஓமலூர் பேரூராட்சியில் **2021–2022**ஆம் ஆண்டிற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினால் ஆய்வு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்ற தகவலையும், மே **2021** முதல் டிசம்பர் **2021** வரை மேற்கொள்ளப்பட்ட செலவினப் பட்டியல் (Vouchers) போன்றவற்றின் நகல்களையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கின்றோம்" என்று தெரிவித்துள்ளனர்.

4. ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 14.6.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2021–2022ஆம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேட்டூர்–ஆத்தூர் கூட்டுக்குடிநீர் திட்ட பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.137 (19) நாள் 20.5.2021–இன்படி திரு. ஜி. செல்வம், மேட்டூர் என்பவர் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். குடிநீர் திட்ட குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படும் புகாரின் அடிப்படையில், குடிநீர் குழாய் பொருத்துநரால் வழங்கப்பட்ட அறிக்கையின்படி மேட்டூர்–ஆத்தூர் கூட்டுக்குடிநீர் திட்ட குழாய் உடைப்பு கண்டறியப்பட்டால், செயல் அலுவலரால் தல ஆய்வு செய்யப்பட்டு, உடனடியாக ஒப்பந்ததாரரை பணிமேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டு, குழாய் பொருத்துநர் மேற்பார்வையில் சீரமைக்கப்பட்டு வருகின்றன. பணிகள் முடிவுற்றபின் ஒப்பந்ததாரரால் தொகை வழங்கக்கோரும் விண்ணபத்தின்பேரில், குடிநீர் குழாய் பொருத்துநரால் பணி முடிக்கப்பட்டதற்கான அறிக்கையின் அடிப்படையில், தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பட்டியல் தொகை காசோலையாக வழங்கப்படும். இச்செலவினங்கள் முழுமையாக பேரூராட்சியில் தனிப்பதிவேடாக பராமரிக்கப்பட்டு வருவதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் பார்வைக்கு சமர்ப்பிப்பதாக ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். மேலும் புகார் தெரிவிக்கப்பட்ட மாதங்களான 5/2021 முதல் 12/2021 (03.12.2021 வரை) முடிய மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பட்டியலையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிப்பதாகவும், மேற்படி செலவினங்களுக்கு மாதாந்திர மன்றக் கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

5. மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், வாக்குமூலத்துடன் கூடுதலாக வழங்கப்பட்ட ஆவணங்கள், ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம், விளக்க அறிக்கை மற்றும் ஆவண நகல்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- ஓமலூர் குடிநீர் பராமரிப்புப் பணிகளுக்கான செலவுச் சீட்டுகளில் முறைகேடுகள் நடப்பதாகவும், பல்வேறு இடங்களில் குடிநீர் இணைப்புகளில் பழுது ஏற்பட்டதாக போலி விண்ணப்பம் தயார் செய்து, குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகளுக்கான ஒப்பந்ததாரர் திரு. செல்வம் என்பவரது பெயரில் காசோலை கொடுத்து, அதை அவர் வங்கியிலிருந்து மாற்றி வெளியில் வரும்போது பேரூராட்சி பொருத்துநர் திரு. விதுன் என்பவர் பணத்தை பெற்றுச் சென்றுள்ளார் என்றும், சுமார் 8 மாதங்களில் (5/2021 முதல் 12/2021 வரை) ரூ.6,29,000/– மேட்டூர் குடிநீர் பராமரிப்புப் பணிகளுக்காக திரு. செல்வம் என்பவரது பெயரில் காசோலை கொடுக்கப்பட்டுள்ளது என்றும், ஒப்பந்ததாரர் திரு. செல்வம் அளித்துள்ள பில் தொகையில் உதிரி பாகங்கள் வாங்கியதாக கணக்கு காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், பேரூராட்சியில் ஏற்கனவே மேட்டூர் குடிநீர் பராமரிப்புப் பணிகளுக்கு

ஜெனித் & Co. என்ற நிறுவனம் பைப் மற்றும் உதிரி பாகங்களை விநியோகம் செய்வதற்கு ஒப்பந்ததாரரராக நியமிக்கப்பட்டு, அதற்கு தனியாக பேரூராட்சி பொது நிதியிலிருந்து தொகை கொடுக்கப்பட்டுள்ளதால், ஒரே பணிக்கு இரண்டு முறை தொகை கொடுக்கப்பட்டுள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும், எனவே இது குறித்து விசாரணை மேற்கொண்டு குடிநீர் பராமரிப்புப் பணிகளில் பொது நிதியில் நடைபெற்றுள்ள ஊழலை கண்டறியுமாறும், அதற்கு உடந்தையாக இருந்த பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் பொருத்துநர் திரு. விதுன் ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும், ஊழல் பணத்தை பறிமுதல் செய்து பேரூராட்சி பொது நிதியில் சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் மனுதாரரால் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

- ஓமலூர் பேரூராட்சியின் 20.5.2021ஆம் நாளிட்ட சாதாரணக் கூட்ட தீர்மானம் எண்.137 (19)ல் 2021–2022ஆம் ஆண்டுக்கு குடிநீர் திட்ட பைப்லைன்கள் பராமரிப்புப் பணிக்கு திரு. ஜி. செல்வம், மேட்டூர் என்பவர் அளித்த குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு, சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- அதேபோன்று, 18.02.2020ஆம் நாளிட்ட சாதாரணக் கூட்ட தீர்மானம் எண்.14 (07)ல் 2020–2021ஆம் ஆண்டுக்கு குடிநீர் பராமரிப்பிற்கு தேவையான பொருட்களை சப்ளை செய்ய ஜெனித் டியூப்ஸ் அண்டு பைப்ஸ், குமாரபாளையம் என்ற நிறுவனம் அளித்த குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு, சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் 2021–2022ஆம் ஆண்டுக்கு குடிநீர் பராமரிப்பு பணிகளுக்குத் தேவையான பொருட்களை சப்ளை செய்யவும் ஜெனித் டியூப்ஸ் அண்டு பைப்ஸ், குமாரபாளையம் என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் மண்டலம் அவர்களது தீர்மானம் எண்.138 (20) நாள் 20.5.2021ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளதும் தெளிவாகிறது.

- பேரூராட்சிகள் ஆணையரகத்தால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தங்களில் குடிநீர் திட்டத்திற்கான பணியாளர்களை பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தாமல் ஒப்பந்ததாரர்கள் மூலம் செயல்படுத்துவது ஏற்கத்தக்கதல்ல என்றும், இதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுகிறது என்றும், குடிநீர் பராமரிப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் குடிநீர் குழாய் உடைப்பினை பழுது பார்த்தல், மின் மோட்டார்கள் பழுது பார்த்தல் ஆகிய இனங்களுக்குத் தேவையான ஆவணங்கள்/ஆதாரங்கள் பராமரிக்கப்படவேண்டும் என்றும், பழுதுகள் நேரா வண்ணம் உரிய காரணத்தை ஆராய்ந்து பழுதுகள் மீண்டும் ஏற்படாமல் அதனை தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

- கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் அளவு மூன்று மாதங்களுக்குத் தேவையான பொருட்கள் மட்டுமே இருப்பில் இருக்கலாம். நீண்ட நாட்கள் இருப்பில் இருந்தால் இச்செயல் நிதி முடக்கமாகுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால்,

இந்த நடைமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டுள்ளதாக ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையில் உறுதிசெய்யப்படவில்லை.

- மனுதாரரின் புகார் குறித்து ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் அளிக்கப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், குடிநீர் திட்ட உபகரணங்கள் சப்ளை செய்த வகையில் ஜெனித் டியூப்ஸ் அண்டு பைப்ஸ், குமாரபாளையம் என்ற நிறுவனத்திற்கு ரூ.19,22,957/–ம் (ரூபாய் பத்தொன்பது லட்சத்து இருபத்ரெண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தேழு மட்டும்), குடிநீர் திட்ட பைப்லைன் பராமரிப்புப் பணிகள் செய்த ஒப்பந்ததாரர் திரு. ஜி. செல்வம் என்பவருக்கு ரூ.6,29,000/–ம் (ரூபாய் ஆறு லட்சத்து இருபத்தொன்பதாயிரம் மட்டும்), ஆக மொத்தம் 5/2021 முதல் 12/2021 வரையிலான காலத்திற்கு ரூ.25,51,957/– (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து ஐம்பத்தோராயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தேழு மட்டும்) ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சியால் செலவிடப்பட்டுள்ளது தெரியவருகிறது.

- குடிநீர் திட்ட பைப்லைன் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் திரு. ஜி செல்வம் என்பவர் பணிகளை மேற்கொண்டமைக்கு தொகை விடுவிக்கக் கோரி செயல் அலுவலருக்கு அளித்துள்ள கடிதங்களில் குடிநீர் பைப்லைன் பழுதுநீக்கம் செய்துகொடுத்தமைக்கு பொருட்கள் மற்றும் ஆட்கள் கூலித் தொகை ஆகியவற்றை வழங்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது தெளிவாகிறது.

- எனவே, மனுதாரரால் எழுப்பப்பட்டுள்ள சந்தேகத்தின்படி பொருட்கள் வாங்க ஒரு நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதும், அந்நிறுவனத்திடமிருந்து பொருட்களை பேரூராட்சி நிர்வாகம் பெறுகிறபோது, பராமரிப்புப் பணிகளை மட்டும் மேற்கொள்ள நியமிக்கப்பட்ட திரு. ஜி. செல்வம் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள தொகை பராமரிப்புப் பணிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டதா அல்லது பராமரிப்புப் பணிகளுக்கும் மற்றும் பொருட்கள் வாங்கியதற்கும் சேர்த்து அவரால் வழங்கப்பட்டுள்ள பட்டியல்கள் பேரூராட்சியால் அனுமதிக்கப்பட்டு, ஒப்பளிக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் இம்முறைமன்ற நடுவத்திற்கும் எழத்தான் செய்கிறது. ஏனெனில், மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல், ஆறு மாத காலங்களில் ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சியால் குடிநீர் பராமரிப்புப் பணிகளுக்கென மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினம் மிகவும் அதிகமென்றே கருதப்படுகிறது.

- உதாரணமாக 5/2021ல் செலவுச் சீட்டு எண்.60/03.5.2021ன்படி ஓமலூர் பேரூராட்சியில் குடிநீர் திட்ட பைப்லைன்கள் கீழ்க்கண்ட இடங்களில் பழுது ஏற்பட்டு, அதற்கு ஒப்பந்ததாரரால் கோரப்பட்டு, ஒப்பளித்து வழங்கப்பட்ட காசோலை ரூ.9,850/–க்கான (ரூபாய் ஒன்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) விவரங்கள் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளன.

| வரிசை எண் | பழுது ஏற்பட்ட பகுதி/பழுதின் விவரம் | பழுது சீரமைக்கப் பட்டமைக்கு ஒப்பந்ததாரரால் கோரப்பட்ட தொகை |
|---|---|---|
| 1. | 12வது வார்டு செவ்வாய் சந்தை பகுதியில் 5" இரும்பு கேட் வால்வு பழுது | ரூ.2,100/. |
| 2. | 2வது வார்டு புதுத்தெரு பகுதி OHT அருகில் 5" இரும்பு மெயின் கேட்வால்வு பழுது | ரூ.2,250/– |
| 3. | 5வது வார்டு சேலம் ரோடு பெட்ரோல் பங்க் பின்புறம் 2" GI பைப்லைன் உடைப்பு | ரூ.2,000/– |
| 4. | 11வது வார்டு அம்மன் நகர் பகுதியில் 3" PVC பைப்லைன் உடைப்பு | ரூ.1,950/– |
| 5. | 13வது வார்டு GLR டேங் அருகில் 3" GM கேட்வால்வு பழுது ஏற்பட்டது | ரூ.1,550/– |
| | பழுதுகள் நீக்கம் செய்யப்பட்டமைக்கு ஒப்பந்ததாரர் திரு. ஜி. செல்வம் என்பவரால் கோரப்பட்டு, ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் தொகை (Total) | ரூ.9,850/– |

- மனுதாரர் அளித்துள்ள வாக்குமூலத்தில் "குடிநீர் குழாய் பழுதுகள் பொதுவாக ஒருவார்டுக்கு 4 அல்லது 5 தான் ஒரு மாதத்தில் வரக்கூடும். ஆனால், ஓமலூர் பேரூராட்சியில் நான் வசிக்கும் வார்டைத் (வார்டு எண்.4) தவிர மற்ற வார்டுகளில் அடிக்கடி பழுது என தெரிவித்து பில் அளித்து பணத்தை பெற்றுள்ளனர்" என்று குறிப்பிட்டுள்ளார். ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் திரு. ஜி. செல்வத்திற்கு குடிநீர் குழாய் பழுதுகளுக்காக வழங்கப்பட்ட தொகைகளுக்குரிய ஆவணங்கள் (பேரூராட்சி பொருத்துநரது கடிதங்கள் மற்றும் ஜி. செல்வம் என்பவரால் பழுதுநீக்கம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ள கடிதங்கள்) ஆய்வு செய்யப்பட்டதில், மனுதாரரின் வார்டு எண்.4ல் குடிநீர் குழாய் பழுதுகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டதாக பதிவுகள் ஏதும் இல்லை என்பது தெளிவாகிறது. இதுவரை திரு. ஜி. செல்வம் என்வருக்கு அளிக்கப்பட்டுள்ள ரூ.6,29,000/–ல் வார்டு எண்.4ல் பழுதுகளே மேற்கொள்ளாதபோது, வார்டு எண்.4ஐத் தவிர இதர வார்டுகளில் மட்டும் எவ்வாறு அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டுள்ளன என்ற கேள்வி எழுவதுடன், மற்றைய இடங்களில் ஏற்பட்ட பழுதுகள் மற்றும் அதற்கான விவரங்களும் மிகுந்த ஐயப்பாட்டினை எழுப்புவதாகவே உள்ளது. மனுதாரர் தனது சந்தேகத்தின் அடிப்படையில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் திரு. ஜி. செல்வம் என்பவருக்கு 5/2021 முதல் 12/2021 வரை வழங்கப்பட்ட காசோலைகள் விவரங்களை பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகவே உள்ளது.

- பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்ட நாள், கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களின் விவரம் ஆகியவை முறையாக பதிவு செய்யப்பட்டு, அதிலிருந்து எந்தெந்த தேதிகளில் என்னென்ன பொருட்கள் எந்தெந்த வார்டுகளில் பழுதுநீக்கம்

செய்வதற்கு அளிக்கப்பட்டன என்பதற்கான விவரங்கள் இருப்புப் பதிவேட்டில் முறையாக பதிவு செய்யப்படாததால் பேரூராட்சியால் கொள்முதல் செய்யப்பட்ட குடிநீர் பராமரிப்புப் பணிகளுக்கான பொருட்கள் மற்றும் அவை எந்தெந்த இடங்களுக்கு எந்தெந்த நாட்களில் வழங்கப்பட்டன என்பதை தீர்மானிக்க இயலவில்லை. இதுவும் குடிநீர் பராமரிப்புப் பணிகளில் முறைகேடுகள் நடைபெற்றிருக்கக்கூடும் என்ற ஐயப்பாட்டிற்கு ஆதாரமாக விளங்குகிறது.

- ஒவ்வொரு பட்டியல் தொகையிலிருந்தும் 2 சதவீத வருமான வரி பிடித்தம் பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்டதாக ஆவணங்களின்படி காணப்படவில்லை.

- ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களை நாளிதழ்களில் வெளியிடும்போது பின்பற்றவேண்டிய நடைமுறைகள் பின்வருமாறு வகுத்துரைக்கப்பட்டுள்ளன:-

| விளம்பரங்கள் வெளியிடும் நாளிதழ்களின் எண்ணிக்கை மற்றும் பதிப்பு | பணிகளின் மதிப்பு | வாங்கும் பொருட்கள்/ கருவிகளின் மதிப்பு |
|---|---|---|
| மாவட்ட அளவிலான விளம்பரம்<br>இரண்டு தமிழ் நாளிதழ்கள்<br>(மாவட்ட அளவில் மட்டும்) | ரூ.10 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.25 இலட்சத்திற்குள் | ரூ.5 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.10 இலட்சத்திற்குள் |
| மாநில அளவிலான விளம்பரம்<br>ஒரு ஆங்கில நாளிதழ்<br>ஒரு தமிழ் நாளிதழ்<br>(அனைத்துப் பதிப்புகள்)<br>(தமிழ் நாட்டில்) | ரூ.25 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.1 கோடிக்குள் | ரூ.10 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.25 இலட்சத்திற்குள் |
| ஒரு ஆங்கில நாளிதழ்<br>(தென்னக பதிப்பு)<br>ஒரு தமிழ் நாளிதழ்<br>(அனைத்து பதிப்புகள்)<br>(தமிழ் நாட்டில்) | ரூ.1 கோடிக்கு மேல்<br>ரூ.5 கோடிக்குள் | ரூ.25 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.1 கோடிக்குள் |
| ஒரு ஆங்கில நாளிதழ்<br>(அனைத்து பதிப்பு)<br>ஒரு தமிழ் நாளிதழ்<br>(அனைத்து பதிப்புகள்)<br>(தமிழ் நாட்டில்) | ரூ.5 கோடிக்கு மேல் | ரூ.1 கோடிக்கு மேல் |

- மேற்குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின்படி, ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி **2021–2022**ஆம் ஆண்டில் இதுவரை ரூ.20 லட்சத்திற்கான குடிநீர் திட்ட உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ள நிலையில், அதன் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் ஒரு ஆங்கில நாளிதழ் (தென்னக பதிப்பு) மற்றும் ஒரு தமிழ் நாளிதழ் (அனைத்து

பதிப்புகள்) (தமிழ் நாட்டில்) பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், எஞ்சிய மாதங்களில் வாங்கப்படும் பொருட்களின் மதிப்பையும் சேர்த்தால் ரூ.25 லட்சத்திற்குமேல் கொள்முதல் மேற்கொள்ளப்படுமென்பது உறுதியாகிறது. ஆனால், முறையான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டதாகவோ, அது குறித்த ஆவணங்களோ இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்படவில்லை. ஆயினும், ஜெனித் டியூப்ஸ் அண்டு பைப்ஸ், குமாரபாளையத்திற்கான பட்டியல் தொகைகள் அவ்வப்போது சேலம் மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநரது செயல்முறை ஆணைகள் மூலம் விடுவிக்க அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளன. மேலும், பட்டியலின் முழுத் தொகையும் அந்நிறுவனத்திற்கு பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

- பேரூராட்சி மண்டல உதவி இயக்குநர் தனது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பேரூராட்சிகளில் முறையான கால இடைவெளியில் அவ்வப்போது திடீர் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தால், பேரூராட்சியில் நடைபெறும் ஊழல்களும், அபரிமித செலவினங்களையும், செலவுச்சீட்டுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்கான காரணங்களையும் அவற்றின் உண்மைத் தன்மையையும் கண்டறிந்திருக்க முடியும். ஆனால், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் மண்டலம் இவ்வாறான ஆய்வினை ஓமலூர் பேரூராட்சியில் மேற்கொண்டதாகவோ, உரிய செலவினங்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டதாகவோ செயல் அலுவலரின் அறிக்கையில் இடம்பெறவில்லை. மாறாக பேரூராட்சியில் செலவுச் சீட்டுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு உதவி இயக்குநர் ஒப்பளிப்பு வழங்கியுள்ளார்.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், சேலம் மாவட்டம், ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சியில் 2021–2022ஆம் ஆண்டில் வருடாந்திர ஒப்பந்தம் கோரப்பட்டு, அவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் பேரூராட்சியில் குடிநீர் திட்ட உபயோகத்திற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கு ஜெனித் டியூப்ஸ் அண்டு பைப்ஸ், குமாரபாளையம் என்ற நிறுவனமும், குடிநீர் திட்ட பைப்லைன் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு திரு. ஜி. செல்வம், மேட்டூர் என்பவரும் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், பேரூராட்சியில் குடிநீர் பராமரிப்புப் பணிகளுக்காக செலவுச் சீட்டுகள் மூலம் திரு. ஜி. செல்வம் என்பவருக்கு 5/2021 முதல் 12/2021 வரை மட்டும் ரூ.6,29,000/– (ரூபாய் ஆறு லட்சத்து இருபத்தொன்பதாயிரம் மட்டும்) வழங்கப்பட்டுள்ளதும், குடிநீர் திட்ட உபயோகத்திற்குத் தேவையான உபகரணங்கள் வாங்கிய வகையில் ஜெனித் டியூப்ஸ் அண்டு பைப்ஸ், குமாரபாளையம் என்ற நிறுவனத்திற்கு ரூ.25,51,957/–ம் (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து ஐம்பத்தோராயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தேழு மட்டும்) வழங்கப்பட்டுள்ளதும் தெளிவாகிறது. குடிநீர் திட்ட பராமரி.புப் பணிகளுக்கான செலவுச் சீட்டுகளில் முறைகேடுகள் நடப்பதாகவும், பல்வேறு இடங்களில் குடிநீர் இணைப்புகளில் பழுது ஏற்பட்டது என்ற பெயரில் போலியான விண்ணப்பம் தயார் செய்து திரு. ஜி. செல்வம் என்பவரது பெயரில் காசோலை கொடுத்து அதை பேரூராட்சி பொருத்துநர் வாங்கிச்சென்றுள்ளார் எனவும், மேலும் திரு. ஜி. செல்வம் என்பவர் பராமரிப்புப் பணிகளை

மேற்கொண்ட வகையில், அதற்கு தொகை வழங்கிடக்கோரி அளித்துள்ள கடிதங்களில் பில் தொகை பொருட்கள் மற்றும் ஆட்கள் கூலி என குறிப்பிட்டு எழுதிக்கொடுத்து, பேரூராட்சியால் திரு. ஜி. செல்வத்திற்கு தொகை ஒப்பளித்து வழங்கப்பட்டுள்ளதும் பேரூராட்சி ஆவணங்களிலிருந்தும், மனுதாரரது புகார் மனுவின் அடிப்படையிலும் தெரியவருகிறது. இதனால் ஒரே பணிக்கு இரண்டு முறை பேரூராட்சியினால் தொகை வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரரால் சந்தேகமும் எழுப்பப்பட்டுள்ளது.

ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலத்தில் **2021–2022**ஆம் ஆண்டிற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினால் ஆய்வு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளதால், ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சியில் **2021–2022**ஆம் ஆண்டில் குடிநீர் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது மற்றும் குடிநீர் பராமரிப்புப் பணிகளுக்கான உபகரணங்களை ஜெனித் பைப்ஸ் அண்டு டியூப்ஸ், குமாரபாளையம் என்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்த வகையிலும், குடிநீர் திட்ட பராமரிப்புப் பணிகளுக்கு அதிகமாக செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இப்பணிகளில் முறைகேடுகள் நடந்துள்ளனவா என்பதை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் மூலம் ஒரு குழு அமைத்து விரிவான ஆய்வு மேற்கொண்டும், வாங்கப்பட்டுள்ள பொருட்கள் அனைத்தும் முறையாக கொள்முதல் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, எந்தெந்த நாட்களில் எவ்வளவு பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டன, அவற்றின் இருப்பு அந்த நாளில் பதிவேட்டில் ஏற்றப்பட்டு, இருப்பிலிருந்து எங்கெந்த பணிகளுக்கு எந்தெந்த நாட்களில் எவ்வளவு பொருட்கள் வழங்கப்பட்டன, மீதமுள்ள இருப்பு பதிவேட்டின்படி சரியாக உள்ளனவா என்பதையும் தீர ஆய்வு செய்தும், குடிநீர் திட்ட உடைப்புகள்/பழுதுகள் குறித்து பொதுமக்களால் அளிக்கப்பட்டுள்ள புகார்கள் குறித்த பதிவேட்டினை சரிபார்த்தும், அவற்றில் முறைகேடாக ஊழல் மேற்கொள்ளப்பட்டிருப்பின், சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்கள், பேரூராட்சி பொருத்துநர் மற்றும் இதர அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு கடுமையான தண்டனைகளை வழங்கிடுமாறு பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ள வருடாந்திர ஒப்பந்தங்கள் முறையான நடைமுறைகளின்படியும், விதிமுறைகள் யாவும் முறையாக பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும், செலவுச் சீட்டுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினங்களில் உரிய அறிவுறுத்தங்கள்/நடைமுறைகள் யாவும் முறையாக கடைபிடிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் ஆய்வு செய்து, இச்செலவினங்களில் முறைகேடுகள் ஏதும் நிகழாவண்ணம் உரிய கண்காணிப்புடன் மேற்கொள்ளப்படும் வகையில் திருத்திய நடைமுறைகளையும்/கண்காணிப்பினையும் உறுதிசெய்திட தக்க நடவடிக்கைகளை வகுத்துரைக்குமாறும் பேரூராட்சிகளின் ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர்கள் ஒவ்வொரு காலாண்டிலும் தமக்குக் கீழுள்ள பேரூராட்சிகளில் ஆய்வு மேற்கொண்டு, அவ்வாய்வறிக்கையின் நகலொன்றினை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், பேரூராட்சிகளின் ஆணையாளருக்கும் தவறாது அனுப்பிடவும், பேரூராட்சிகளில்

மேற்கொள்ளப்படும் அபரிமிதமான செலவுகளைக் கண்காணித்து அவற்றினை கட்டுக்குள் கொணர சீரிய முறையில் ஆலோசனைகளை அளித்து அவற்றினை பேரூராட்சிகள் நடைமுறைப்படுத்திட வேண்டியதும் காலத்தின் கட்டாயமென்பதை பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் வலியுறுத்த விரும்புகிறது.

The credibility level of the report of the Omalur Town Panchayat leaves much behind to be desired for the following discrepancies:-

(1) No adequate publicity was made for purchase of pipeline items as per standing instructions and as enumerated in the table in the findings mentioned above

(2) It is simply surprising that no repairs were done for any water connection and pipeline fittings in the whole of Ward 4 from where the petitioner hails. But repairs were undertaken in other Wards right and left to spend the allotted amount systematically.

(3) It is quite strange that no complaint petition has been received from any of these Wards pointing out the disrepair and breakdown of water supply system

(4) Hence there is every suspicion that the whole repair, replacement and restoration theory reeled out by the Town Panchayat authorities is a lame excuse to justify the expenditure of Rs.6,29,000/- (Rupees Six lakhs twenty nine thousand only) towards maintenance cost head.

The Director of Local Fund Audit is directed to verify the records, bills, vouchers involved in this purchase, expenditure and settlement issue and bring out the factual position enabling the Commissioner of Town Panchayats to proceed further with disciplinary action if warranted by detection of irregularities, malpractices and misuse of Government funds for personal pecuniary gain. The Commissioner of Town Panchayats is instructed to pursue the orders to the logical end by sustained follow-up.

**2022**ஆம் ஆண்டு, ஜுன் திங்கள் **29**–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/- x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. அ. பிரகாஷ்,
**7/1** அரசமரத்தெரு, ஓமலூர் மற்றும் வட்டம், சேலம் மாவட்டம்–**636 455**
செயல் அலுவலர்,
ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி, ஓமலூர், சேலம் மாவட்டம்–**636 455**

மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் மாவட்டம்.
பேரூராட்சிகளின் உதவி உதவி இயக்குநர், சேலம் மண்டலம், சேலம்
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை–35

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளர்